# ஒரு விவசாயின் வெற்றிக் கதை - அலப்பன் ஹல்லி:

**ஜெகதீஷ்,**
**த/பெ. கௌடப்பா,**
**ஹோஸ்கோட் தாலுகா,**
**பெங்களூர் மாவட்டம்,**
**கர்நாடகா.**
**அலைபேசி எண்:09741000986**

---

**அறிமுகம்:**

எனது பெயர் திரு. ஜெகதீஷ், எனது தகப்பனார் பெயர் கௌடப்பா. நாங்கள் மாநிலத் தலைநகரமான பெங்களூரில் இருந்து 23 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கும் ஹோஸ்கோட் தாலுக்காவைச் சேர்ந்த அலப்பன்ஹல்லி என்ற கிராமத்தில் வசித்து வருகிறோம். நான் பத்தாவது வரை படித்து விட்டு எனக்கு விவசாயத்தில் ஆர்வம் இருந்ததால் என்னுடைய படிப்பை நிறுத்திக் கொண்டேன். 25வருடங்களாக என்னை அதில் ஈடுபடுத்திக் கொண்டேன். நான் விவசாயத்தில் நிறைய ஏற்றத்தாழ்வுகளை கண்டிருக்கிறேன்.

**பயிரிடப்படும் பயிர்கள்:**

எனது தந்தைக்குச் சொந்தமான 8 ஏக்கரில் விவசாய நிலங்கள் உள்ளன. அனைத்து நிலங்களும் விவசாயத்திற்கே பயன்படுத்தப்பட்டன. எங்கள் தோட்டத்தில் 3 ஆழ்துளைக் கிணறுகள் உள்ளது. விவசாயத்திற்கு அந்தக் கிணற்று நீரே ஆதாரமாக உள்ளது. ஆழ்துளைக் கிணறுகளில் இருந்து நீரை எடுத்து மேல் நிலைத் தொட்டிகளில் சேமித்து வைக்கப்படும். இந்த 8 ஏக்கரும் கரிசல் மண் வகையை சார்ந்தது. இதில் முக்கியமாக பயிர் செய்யப்படும் பயிர்கள் தக்காளி, ரோஜா, முட்டைகோஸ், நெல். தக்காளியை இரண்டு ஏக்கரில் ஜீன்,ஜீலை மாதங்களில் பயிர் செய்வேன். 3 அடி வரிசைக்கு வரிசை இடைவெளி விட்டு 1.5 அடி இடைவெளிகளில் பயிர் நடுவேன். உரமானது தழை, மணி, சாம்பல் சத்துகளுடன் நுண்ணூட்டப்பட்டங்களையும் கலந்து நடவின் பொழுது அடுத்த 15

நாள் இடைவெளிகளிலும் கொடுத்துவருவேன். நாங்கள் தொழிலாளர்களை தினக்கூலி அடிப்படையில் ஒரு நாளைக்கு 200 / நாள் / தொழிலாளர் அமர்த்தப்படுவர். பழம் லேசாக சிவக்க ஆரம்பித்தவுடன் அறுவடையை தொடங்கி விடுவேன். ஒல்வொரு பருவத்திலும் சராசரியான அறுவடை ஏறக்குறைய 40 குவிண்டால்கள் கிடைக்கும்.

**சந்தைப்படுத்துதல்:**

நாங்கள் வியாபாரத்திற்கு உள்ளூர் சந்தையான ஹோஸ்டோக்கும், கோலாரில் உள்ள தக்காளி சந்தையை மட்டுமே நம்பி வந்தோம். எங்களுடைய உற்பத்தியின் விலையை நிர்ணயிப்பது வியாபாரிகளின் கைகளில் மட்டுமே இருந்தது. அவர்கள் என்ன விலை நிர்ணயிக்கிறார்களோ அதன் அடிப்படையிலேயே அவர்களிடம் விற்கும் போது பல நேரங்களில் பெருத்த நஷ்டம் கூட ஏற்பட்டுள்ளது. பல நேரங்களில் விவசாயம் ஒரு லாபகரமான தொழில் இல்லை என்று உணர்ந்திருக்கிறேன்.

**தினசரி சந்தை நிலவரத்தில் ஏற்படும் லாபகரமான விவசாயம்**:

எனக்கு ஜென்டெக் நிறுவனத்தில் களப்பணியாளராக பணியாற்றும் எனது நண்பர் மஞ்சுநாத் மூலமாக கே.ஆர்.சந்தை ஆய்வாளர் ,காந்த் மூலம் தினசரி சந்தை நிலவரம் என்ற திட்டத்தினை அறிந்தேன். கே.ஆர்.சந்தை ஆய்வாளர் ,காந்துடன் எனது நண்பர் மஞ்சுநாத் அலப்பன்ஹள்ளியல் உள்ள எனது நிலத்தை பார்வையிட்டார். அவர் எனக்கு தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் தினசரி சந்தை நிலவரம் என்ற இணையதளத்தை அறிமுகப்படுத்தினார். அதன் மூலம் எனக்கு கே.ஆர்.சந்தை வழக்கமான நடவடிக்கைகளான சந்தையின் நிலை எந்த முறையில் பணவரவு ஆகியவற்றைத் தெரிந்து கொண்டேன். பிறகு நான் தினசரி சந்தை நிலவரம் என்ற இணைதளத்தைப் பற்றி நன்றாகத் தெரிந்து கொண்டு நான் உள்ளூர் ஹோஸ்கோட் சந்தை, கோலார் சந்தை மற்றும் பெங்களூரின் கே.ஆர்.சந்தை போன்றவற்றின் விலை நிலவரங்களை நேரடியாகச் சென்று ஆய்வு செய்தும் தினமும் இணையதளத்தைப் பார்த்து பொருட்களின் விலையை ஒப்பிட்டுப் பார்த்தும் தெரிந்து கொண்டேன்.

ஹோஸ்கோட் சந்தை, மற்றும் கோலார் சந்தைகளை ஒப்பிட்டுப் பார்க்கும்போது கே.ஆர்.சந்தையின் விலை அதிகமாக இருந்ததது. அதன் பிறகு நான் உற்பத்திப் பொருட்களை கே.ஆர்.சந்தையில் விற்பதே சிறந்தது என்பதை உணர்ந்தேன். நாங்கள் எங்கள் உற்பத்திப் பொருட்களுக்கு எங்கே நல்ல விலையோ அங்கு விற்றால் விவசாயமும், தோட்டக்கலைப்பயிர் விவசாயமும் லாபகரமானது என்பதை முழுமையாக உணர்ந்தேன். இந்த வியாபார யுத்தி தினசரி சந்தை நிலவரம் மூலம் மட்டுமே என்னால் பெற முடிந்தது.

இணையதளம் மூலம் பெறும் இந்தத் தகவல் எங்களுக்கு மிகவும் உதவியாக இருப்பதோடு எங்களுக்கு மொத்தவிலை மற்றும் சில்லரை விலை ஆகிய இரண்டுமே கிடைக்கிறது. நாங்கள் விலையை ஒப்பிட்டு எங்கள் விவசாயப் பொருட்களுக்கு எங்கு அதிக விலை கிடைக்கிறதோ அதைப் பின்பற்றுவதால் எனக்கு விவசாயம் முன்பை விட மிகவும் லாபகரமானது என்பதை உணர்கிறேன். என் வாழ்க்கைத்தரமும் மிகவும் உயர்ந்துள்ளது. நான் இனி வரும் காலங்களிலும் தினசரி சந்தை நிலவரங்களின் விலையை பின்பற்றுவேன். இணையதளத்தைத் தவிர்த்து தக்காளி வகைகளின் தினசரி சந்தை விலையை மொபைல் செய்திகள் மூலமும் தெரிந்து கொள்கிறேன். மேலும் இந்த இணையதளத்தையும், மொபைல் செய்திகள் வசதியையும் எங்கள் கிராமத்தில் உள்ள என்னுடைய விவசாய நண்பர்களையும் பயன்படுத்த செய்துள்ளேன். தினசரி சந்தை நிலவரங்கள் பல விவசாயிகளின் வியாபார வழிகளை மாற்றியுள்ளது. மேலும் தினசரி சந்தை நிலவரங்களின் பின்னால் உறுதுணையாக இருக்கும் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானிகளின் இந்தப் பணியினால் பல விவசாயிகளின் மிகவும் திருப்தி அடைந்துள்ளனர். எனது நன்றியை தினசரி சந்தை நிலவரத்திற்கும் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்திற்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.